## (ஆ) கைத்தொழில் உற்பத்தி

### (1) முன்னுரை

1972 ஆம் ஆண்டிற்குரிய கைத்தொழில் உற்பத்தி, வேலை நிலைமை பற்றிய தரவுகள், தனியார், அரசாங்கத் துறை ஆகிய இரண்டிலும் உள்ள கைத் தொழிற் கூறுகளுக்கு அனுப்பப்பட்ட வினாக்கொத்து வாயிலாகப் பெறப்பட் டன. ஒருசில பெரிய கைத்தொழில் நிறுவனங்களைப் பொறுத்தவரையில், தரவுகள் திரட்டுதலைத் துரிதப்படுத்துவதற்காக அஞ்சல் வாயிலாக வினாக் கொத்து அனுப்பப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து, நேரடியாகவும் சென்று தரவுகள் பெறப்பட்டன. வினாக்கொத்துக்கு கைத்தொழிலாளர்களாற் காட் டப்பட்ட ஒத்துழைப்பு, அவர்களுக்கு அளிக்கப்பட்ட காலம் குறைவாகவிருப் பினும், மிகவும் திருப்திகரமாக இருந்தது. மொத்தத்தில் 1,913 வினாக்கொத் துக்கள் திருப்பிப் பெறப்பட்டன. இவற்றில் 15 சதவீதமானவை 1972 ஆம் ஆண்டில் உற்பத்தி நடவடிக்கையெதுவும் இருக்கவில்லையென்பதனைச் சுட்டிக் காட்டியது. இத்தகைய கைத்தொழிற் கூறுகளில் அநேகமானவை, சிறியன வாகக் காணப்பட்டதுடன், 1972 இற் செயற்படாது இருந்தமைக்கு முக்கிய காரணமாகக் காட்டப்பட்டவைகளில், இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களின் போதாமையே முதன்மையாக இருந்தது.

1972ஆம் ஆண்டிற்கான கைத்தொழில் உற்பத்தியின்[1] பெறுமதி ரூ. 24,424 இலட்சமாக இருந்ததுடன் 1971 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து ரூ. 2,347 இலட்சம் அல்லது 10.6 சதவீத அதிகரிப்பினைக் காட்டுகிறது. 1972 ஆம் ஆண்டில், பதில் அனுப்பிய தொழிற் கூறுகள் 1,913 ஆக இருக்க, அதே நேரத் தில், 1971 ஆம் ஆண்டு இது தொடர்பான எண் 1,897 ஆக இருந்தது 1971, 1972 ஆகிய ஈராண்டுகளிலும் பதில் அனுப்பிய கைத்தொழில் நிறுவனங் களின் உற்பத்திப் பெறுமதியானது, ரூ. 1,851 இலட்சத்தால் அல்லது 9.7 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது. இவ்வெண்தொகையானது, ஒப்புநோக்கக்கூடிய தன்மை காரணமாக, 1972 ஆம் ஆண்டுக் கைத்தொழி லின் செயலாக்கம் பற்றிய சிறப்பான குறிகாட்டியாக விளங்குகிறது.

எவ்வாறாயினும், விலை மட்டங்களில் ஏற்படுகின்ற மாற்றங்களினால் வெளியீட்டுப் பெறுமதி பாதிக்கப்படக் கூடுமாகையினால் அளவு வீழ்ச்சியுற்ற போதிலும் வெளியீட்டுப்பெறுமதி அதிகரிப்பினைக்காட்டக்கூடும்.1972இல் கைத் தொழிற் பொருட்களினது விலை அதிகரிப்புக்கள், 1971 ஆம் ஆண்டு மட்டத்தி லும் பார்க்க 6 சதவீதத்தில் இருந்து 20 சதவீதமாக அதிகரித்துக் காணப் பட்டன. கொழும்பு நுகர்வோர் விலைக் குறிகாட்டியானது, 6.3 சதவீதத்தால்

---

1. இத்துறையில் உள்ள உற்பத்தி பற்றிய எண்தொகைகள் உண்மை நியதிகளின்படி தரப்படவில்லை. மேலும் ஆய்வுக்கு எடுக்கப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட கூரிய விலை அதிகரிப்புகளின் காரணமாகப் பெறுமதியில் உயர்வுகள் பெருமளவுக்குத் தென்படுகின்றன.
தரவுகள் கிடைக்கப்பட்ட காலத்திற்கும், வருடாந்த அறிக்கை வெளியிடுவதற்கும் இடையே உள்ள காலம் மிகச் சிறியதாக இருந்தமையினால், வெளியீட்டின் அளவில் மாற்றத்தினைப் பிரதிபலிக்கின்ற உற்பத்திப்பற்றிய குறிகாட்டியினை அமைக்கமுடியவில்லை.

உயர்வடைந்தது. மேற்கூறிய காரணங்களை எடுத்து நோக்குமிடத்து, உற்பத்திப் பெறுமதியிலேற்பட்ட அதிகரிப்பிற்கு, விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே பெருமளவுக்குக் காரணமாயிருக்கலாம்.

## (II) கைத்தொழில் அமைவிடம்

மேல் மாகாணத்திலேயே கைத்தொழில்கள் கூடியளவு செறிவாகக் காணப்படுவதை அட்டவணை 11 (ஆ) 9 இன் அளவை பற்றிய தரவுகள் காட்டுகின்றன. இதனுடன் தொடர்பாக நோக்குமிடத்து மற்றைய பிரதேசங்களில் சில கைத்தொழில்களே உள்ளனவென்றுதெரியவருகின்றது. மேல்மாகாணத்தில் உள்ள கைத்தொழில்களில் அநேகம் கொழும்பினைச் சுற்றியே செறிந்து காணப்படுகின்றன. நகரிலிருந்து 20 மைல் சுற்றுடலிலுள்ள கைத்தொழில்களின் உற்பத்திப் பெறுமதி, மொத்தக்கைத்தொழில் உற்பத்தியில் கிட்டத்தட்ட 80சதவீதமாக உள்ளது. மொத்தக் கைத்தொழில்உற்பத்திப் பெறுமதியில் ஏறக்குறைய 92 சதவீதமானவற்றிற்கு மேல்மாகாணமே வகைகூறிற்று. மேலும் ஏறக்குறைய 80 சதவீதமான கைத்தொழில் முயற்சிகள் இம்மாகாணத்திற்றுன் அமைந்து காணப்படுகின்றன. மற்றைய மாகாணங்கள் மிகவும் பின் தங்கிக் காணப்பட்டதுடன், மொத்தத் கைத்தொழில் உற்பத்திப் பெறுமதியில், அவைகளின் தனிப்பட்ட பங்கு மிகவும் குறைவாகக் காணப்பட்டது. ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம்பெற்றுள்ளவாறு அரசாங்கத்தினுடைய திட்டங்கள், குறிப்பாகக் கிராமியப் பகுதிகளில் உள்ள தெருப் போக்குவரத்து, தெரிந்தெடுக்கப்பட்ட அடிப்படையிலான உள்நாட்டுச் செய்தித் தொடர்பு முறை அபிவிருத்தி, கிராமிய மின்சாரப்படுத்தும் திட்டம் என்பன இப்பிரதேசங்களில் முதலீடு செய்வதற்கான சாதகங்களை அதிகரிப்பதற்கும், கைத்தொழில்களைப் பரவலான அடிப்படையில் ஏற்படுத்துவதற்கும் வகைசெய்கின்றன.

## (III) உற்பத்தி

1972 ஆம் ஆண்டுக் கைத்தொழில் உற்பத்தியின் அதிகரிப்பினை, நடைமுறை விலைகளில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து, ரூ. 2,347 இலட்சமாக அல்லது 10.6 சதவீதமாக இருந்தது. 1971 ஆம் ஆண்டினது 13.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுமிடத்து, இவ்வதிகரிப்பு சிறியளவினதாகக் காணப்பட்டது. அநேக கைத்தொழிற் பொருட்களிலேற்பட்ட விலை அதிகரிப்பு, வெளியீட்டுப் பெறுமதி அதிகரிப்பிலும் கூடியதாகக் காணப்பட்டது இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் பற்றுக்குறை காரணமாக கைத்தொழிலிலேற்பட்ட தடைகளினுடைய தாக்கங்களை அளவிடுதல் இயலாத செயலாகும்.

அரசாங்கத் துறையிலுள்ள கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களின் 1971ஆம் ஆண்டினது உற்பத்திப் பெறுமதி ரூ. 5,689 இலட்சத்திலிருந்து 1972 ஆம் ஆண்டில் ரூ. 8,711 இலட்சமாக உயர்ந்தது. மொத்தக் கைத்தொழில் உற்பத்திப் பெறுமதியில் அவற்றின் பங்கு 25.7 சதவீதத்திலிருந்து 35.6 சதவீதமாக

## கைத்தொழில் உற்பத்தியும் தொழில்

| கைத்தொழிற் பிரிவுகள் | கைத்தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | | | | ஊழியர்களின் எண்ணிக்கை | | | | மொத்த |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1969 | 1970 | 1971 | 1972 | 1969 | 1970 | 1971 | 1972 | 1969 |
| 1. உணவு, குடிபானம், புகையிலை ஆகிய வற்றின் [1]தயாரிப்பு .. | 654 | 649 | 527 | 304* | 31,889 | 33,733 | 24,505 | 32,776 | 8982 |
| 2. புடவைகளும், அணியும் ஆடைகளும் தோற் றொழில்களும் .. | 537 | 530 | 634 | 639 | 25,469 | 27,069 | 22,568 | 32.908 | 6433 |
| 3. தளபாடங்கள் உட்பட மர உற்பத்திகளும், மரத் தயாரிப்புகளும் ... | 15 | 11 | 15 | 11 | 3.393 | 2,907 | 4,127 | 4.668 | 949 |
| 4. தாள் உற்பத்திகளும், தாள்ப் பொருட்களும் . | 95 | 74 | 74 | 67 | 4,876 | 4,462 | 4.645 | 4.323 | 1412 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, றப்பர், பிளாத்திக்கு உற்பத்திகளின் தயாரிப்பு... | 276 | 244 | 244 | 196 | 12.414 | 16,610 | 16,888 | 15,769 | 3459 |
| 6. பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்ந்த உலோகச்சார்பற்ற கனிப்பொருட்களின் தயாரிப்பு | 75 | 67 | 51 | 64 | 7,811 | 8,545 | 9,929 | 8,525 | 2131 |
| 7. அடிப்படை உலோகப் பொருட்கள் ... | 1 | 1 | 1 | 1 | 960 | 963 | 952 | 1,011 | 288 |
| 8. தயாரிக்கப்பட்ட உலோகப் பொருட்கள், எந்திரமும் போக்குவரத்துச் சாதனங்களினதும் தயாரிப்பு | 282 | 228 | 287 | 280 | 16,119 | 12,448 | 15,089 | 21,483 | 4501 |
| 9. தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் வே. கூ. ப. ... | 27 | 49 | 64 | 64 | 795 | 1,367 | 2,127 | 2,453 | 212 |
| மொத்தம் .. | 1,962 | 1,853 | 1,897 | 1626* | 103,726 | 105,105 | 110.141 | 123,986 | 28,367 |

## நிலையும் 1969—72 புள்ளிவிபரச் சுருக்கம்

| ஆள் வேலை நாட்கள் (ஆயிரம்) | | | கூலிச் செலவு (ப. இ. ரூபாய்கள்) | | | | உற்பத்திப் பெறுமதி (ப. இ. ரூபாய்கள்) | | | | ஓராளுக்கான வேலை நாளுக்கான கூலி (ரூபாய்களில்) | | | | ஒரூழியரின் ஆள் வேலைநாட்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1970 | 1971 | 1972 | 1969 | 1970 | 1971 | 1972 | 1969 | 1970 | 1971 | 1972 | 1969 | 1970 | 1971 | 1972 | 1969 | 1970 | 1971 | 1972 |
| 9,651 | 7,747 | 7,856 | 58.3 | 64.4 | 70.5 | 82.7 | 641.8 | 684.5 | 743 0 | 798.7 | 6.49 | 6.67 | 9.10 | 10.52 | 282 | 286 | 229 | 239 |
| 7,352 | 5,254 | 8,536 | 31.8 | 46.0 | 43.3 | 72.9 | 267.1 | 282.7 | 306.2 | 394.5 | 4.94 | 6.25 | 8.24 | 8.54 | 253 | 272 | 233 | 259 |
| 738 | 798 | 1,099 | 7.0 | 8.8 | 8.8 | 13.3 | 18.0 | 21.2 | 26.6 | 30.7 | 7.38 | 11.89 | 11.03 | 12.09 | 280 | 254 | 193 | 235 |
| 1,195 | 1,228 | 1,262 | 10.8 | 10.7 | 11.9 | 14.6 | 62.3 | 65.0 | 70.3 | 79.1 | 7.65 | 8.92 | 9.69 | 11.52 | 290 | 268 | 264 | 291 |
| 3,782 | 4,358 | 4,504 | 34.1 | 39.1 | 72.3 | 82.7 | 249.8 | 439.2 | 530.0 | 563.8 | 9.86 | 10.33 | 16.58 | 18.36 | 279 | 278 | 258 | 285 |
| 2,287 | 2,193 | 2,345 | 18.6 | 26.1 | 25.8 | 37.4 | 123.3 | 138.8 | 176.4 | 172.9 | 8.73 | 11.42 | 11.76 | 15.96 | 273 | 268 | 221 | 276 |
| 270 | 220 | 304 | 4.0 | 2.8 | 4.7 | 3.9 | 23.8 | 38.9 | 58.6 | 67.5 | 13.89 | 10.55 | 21.36 | 12.66 | 300 | 280 | 231 | 300 |
| 3,320 | 3,960 | 5,033 | 33.7 | 29.4 | 39.8 | 54.9 | 226.2 | 256.1 | 273.5 | 304.8 | 7.49 | 8.87 | 10.05 | 10.90 | 279 | 267 | 262 | 234 |
| 395 | 474 | 671 | 1.2 | 2.1 | 2.9 | 5.5 | 9.5 | 18.6 | 23.1 | 30.4 | 5.66 | 5.40 | 6.12 | 8.20 | 267 | 289 | 223 | 273 |
| 28,990 | 26,232 | 31,610 | 199.5 | 229.4 | 280.0 | 367.9 | 1626.8 | 1945.0 | 2207.7 | 2442.4 | 7.03 | 7.91 | 10.67 | 11.63 | 273 | 276 | 238 | 255 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* 1972ம் ஆண்டில் இலங்கைப் புகையிலைக் கூட்டுத்தாபனம், சிறிய பீடி தயாரிக்கும் பல அலகுகளைப் பொறுத்தவரையில் திரட்டப்பட்ட விபர அறிக்கையை ஒப்படைத்தமையே, அறிவிக்கும் நிறுவனங்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பெருமளவு காரணமாகும்.

## கைத்தொழில் உற்பத்திப் பெறுமானம் 1968–72 கைத்தொழிற் துறைகளின்

| | உற்பத்தியின் பெறுமதி (பத்து இலட்சம் ரூபாய்களில்) | | | | |
|---|---|---|---|---|---|
| | 1968 | 1969 | 1970 | 1971 | 1972 |
| **1. உணவு, குளிர்பானங்கள், புயிலைத் தயாரிப்புகள் ...** | 609.6 | 641.8 | 684.5 | 743.0 | 798.7 |
| (அ) உணவுத் தயாரிப்புகள் ... ... | 250.0 | 230.5 | 250.6 | 263.2 | 322.9 |
| (ஆ) தாவர எண்ணெய்களும், கொழுப்புகளும் ... | 162.0 | 169.5 | 170.1 | 190.4 | 143.9 |
| (இ) கலனிட்டு வைக்கப்பட்ட பழங்கள், மரக்கறிகள், இறைச்சி, மீன், ஏனைய கடல் உணவுகள் ... | 8.4 | 8.6 | 11.8 | 23.2 | 11.5 |
| (ஈ) விசுக்கோத்து, கொக்கோ, சொக்கலேற்று, இனிப்பு வகைகள் ... ... | 44.3 | 49.9 | 50.5 | 53.1 | 50.2 |
| (உ) பான வகையும், மதுசாரமும் ... ... | 34.4 | 77.4 | 94.9 | 88.1 | 96.5 |
| (ஊ) புகையிலை ... ... | 110.5 | 105.9 | 106.6 | 124.9 | 173.7 |
| **2. புடவை, ஆடை அணிகள், தோற், கைத்தொழில்கள் ...** | 224.3 | 267.1 | 282.7 | 306.2 | 394.5 |
| (அ) பின்னப்பட்ட துணியும் பொருட்களும், ஆடை அணிகள், காலணி தவிர்ந்த ஏனைய ஆடை .. | 55.7 | 56.0 | 64.3 | 70.8 | 66.7 |
| (ஆ) நூற்றல், நெய்தல், சீராக்கப்படும் துணிகள் ... | 136.2 | 172.2 | 173.3 | 189.4 | 271.2 |
| (இ) காலணிகளும், தோற்பொருட்களும் ... | 32.4 | 38.9 | 45.1 | 46.0 | 56.6 |
| **3. தளபாடங்கள் உட்பட பலகை, மரப்பொருட்களின் தயாரிப்பு...** | 16.9 | 18.0 | 21.2 | 26.6 | 30.7 |
| (அ) மரப் பொருட்களின் தயாரிப்புகள் ... ... | 8.0 | 9.2 | 10.4 | 12.8 | 12.7 |
| (ஆ) ஒட்டுப்பலகை ... ... ... | 8.9 | 8.8 | 10.8 | 13.8 | 18.0 |
| **4. தாளும் தாள் தயாரிப்புகளும் ... ...** | 54.6 | 62.3 | 65.0 | 70.3 | 79.1 |
| **5. இரசாயன, பெற்றோலிய, நிலக்கரி, றப்பர், பிளாத்திக்கு உற்பத்திகளின் தயாரிப்பு ... ...** | 203.3 | 249.8 | 439.2 | 530.0 | 563.8 |
| (அ) தொழிற்றுறைக்குரிய இரசாயனப் பொருட்கள் ... | 2.3 | 2.2 | 3.1 | 3.3 | 5.2 |
| (ஆ) பல்வகை இரசாயன உற்பத்திகள் ... ... | 118.9 | 155.6 | 155.9 | 230.3 | 213.5 |
| (இ) பெற்றோலிய நிலக்கரி உற்பத்திகள் ... | 8.3 | 11.0 | 191.0 | 198.5 | 259.5 |
| (ஈ) றப்பர் உற்பத்திகள் ... ... | 41.3 | 52.8 | 56.4 | 60.2 | 67.7 |
| (உ) பிளாத்திக்கு உற்பத்திகள் ... ... | 32.5 | 28.2 | 32.8 | 37.7 | 17.9 |
| **6. பெற்றோலியம், நிலக்கரி தவிர்ந்த உலோகமற்ற கனிப் பொருள் உற்பத்தித் தயாரிப்பு ... ...** | 92.8 | 123.3 | 138.8 | 176.4 | 172.9 |
| (அ) பீங்கான் பொருட்கள் ... ... | 8.5 | 8.7 | 8.0 | 8.5 | 12.9 |
| (ஆ) கண்ணாடியும் கண்ணாடி உற்பத்தியும் ... | 4.8 | 7.7 | 8.1 | 13.9 | 11.9 |
| (இ) சீமெந்தும், சீமெந்துப் பொருட்களும் கல்நார்ப் பொருட்களும் ... ... | 70.0 | 89.0 | 104.8 | 116.7 | 110.4 |
| (ஈ) இல்மனைற் உற்பத்தி ... ... | 2.2 | 3.1 | 4.7 | 4.7 | 3.7 |
| (உ) செங்கற்களும் ஓடுகளும் ... ... | 7.3 | 14.8 | 13.2 | 13.1 | 34.0 |
| **7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... ...** | 27.3 | 28.8 | 38.9 | 58.6 | 67.5 |
| (அ) இரும்பு, உருக்கு அடிப்படைக் கைத்தொழில்கள் ... | 27.3 | 28.8 | 38.9 | 58.6 | 67.5 |
| **8. உருவாக்கப்பட்ட உலோகத் தயாரிப்புக்களும், எந்திரமும் போக்குவரத்துச் சாதனமும் ... ...** | 167.1 | 226.2 | 256.1 | 273.5 | 304.8 |
| (அ) உருவாக்கப்பட்ட உலோகத் தயாரிப்புகளும், எந்திரங்களும் சாதனங்களும் ... ... | 79.4 | 82.0 | 96.9 | 128.0 | 111.1 |
| (ஆ) எந்திரங்களும் (மின்சார வகை தவிர்ந்த) போக்குவரத்துச்சாதனங்களும் ... ... | 45.9 | 77.9 | 70.8 | 57.3 | 98.9 |
| (இ) மின்சார எந்திரங்கள், ஆய்கருவிகள், உபகருவிகள், வழங்கு பொருட்களும் ... | 41.8 | 66.3 | 88.4 | 88.2 | 94.8 |
| **9. தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் வே. கூ. ப. ...** | 2.7 | 9.5 | 18.6 | 23.1 | 30.4 |
| **மொத்தம் ... ...** | 1398.6 | 1626.8 | 1945.0 | 2207.7 | 2442.4 |

படியும், முதன்மைத் தயாரிப்புப் பொருட்களின்படியும் பகுக்கப்பட்டது

| கைத்தொழிலுக்குள் சதவீதம் | | | | | மொத்தக் கைத்தொழில் உற்பத்தியின் சதவீதம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1968 | 1969 | 1970 | 1971 | 1972 | 1968 | 1969 | 1970 | 1971 | 1972 |
| **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **43.6** | **39.5** | **35.2** | **33.7** | **32.7** |
| 41.0 | 35.9 | 36.6 | 35.4 | 40.5 | 17.9 | 14 2 | 12.0 | 11.9 | 13.2 |
| 26.6 | 26.4 | 24.9 | 25.6 | 18.0 | 11.6 | 10.4 | 8.7 | 8.6 | 5.9 |
| 1.4 | 1.3 | 1.7 | 3.1 | 1.4 | 0.6 | 0.5 | 0.6 | 1.1 | 0.5 |
| 7.3 | 7.8 | 7.4 | 7.2 | 6.3 | 3.2 | 3.1 | 2.6 | 2.4 | 2.0 |
| 5,6 | 12.1 | 13.9 | 11.9 | 12.1 | 2.4 | 4.8 | 4.9 | 4.0 | 4.0 |
| 18.1 | 16.5 | 15.6 | 16.8 | 21.7 | 7 9 | 6.5 | 5.5 | 5.7 | 7.1 |
| **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **16.0** | **16.4** | **14.5** | **13.9** | **16.1** |
| 24.8 | 21.0 | 22.7 | 23.1 | 16.9 | 4.0 | 3.4 | 3.3 | 3.2 | 2.7 |
| 60.7 | 64.5 | 61.3 | 61.9 | 68.8 | 9.7 | 10.6 | 8.9 | 8.6 | 11.1 |
| 14.5 | 14.5 | 16.0 | 15.0 | 14.3 | 2.3 | 2.4 | 2.3 | 2.1 | 2.3 |
| **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **1.2** | **1.1** | **1.1** | **1.2** | **1.3** |
| 47.3 | 51.1 | 49.1 | 48 1 | 41.4 | 0.6 | 0.6 | 0.5 | 0.6 | 0.5 |
| 52.7 | 48.9 | 50.9 | 51.9 | 58.6 | 0.6 | 0.5 | 0.6 | 0.6 | 0 8 |
| **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **3.9** | **3.8** | **3.3** | **3.2** | **3.2** |
| **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **14.5** | **15.3** | **22.6** | **24.0** | **23.1** |
| 1.1 | 0.9 | 0.7 | 0.6 | 0.9 | 0.2 | 0.1 | 0.2 | 0.2 | 0.2 |
| 58.5 | 62.3 | 35.5 | 41.0 | 37.9 | 8.5 | 9.6 | 8.0 | 10.4 | 8.8 |
| 4.1 | 4.4 | 43.5 | 35.3 | 46.0 | 0.6 | 0.7 | 9.8 | 9.0 | 10.6 |
| 20.3 | 21.1 | 12.8 | 16.4 | 12.0 | 3.0 | 3.2 | 2·9 | 2.7 | 2.8 |
| 16.0 | 11.3 | 7.5 | 6.7 | 3.2 | 2.3 | 1.7 | 1.7 | 1.7 | 0.7 |
| **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **6.6** | **7.6** | **7.1** | **8.0** | **7.1** |
| 9.1 | 7.1 | 5.8 | 4.8 | 7.5 | 0.6 | 0.5 | 0.4 | 0.4 | 0.5 |
| 5.2 | 6.2 | 5.8 | 7.9 | 6.9 | 0.3 | 0.5 | 0.4 | 0.6 | 0.5 |
| 75.4 | 72 2 | 75.5 | 66.2 | 63.8 | 5.6 | 5.5 | 5.4 | 5.3 | 4.5 |
| 2.4 | 2 5 | 3.4 | 3.5 | 2.1 | 0.2 | 0.2 | 0.2 | 0.3 | 0.2 |
| 7.9 | 12.0 | 9.5 | 17.6 | 19.7 | 0.5 | 0.9 | 0.7 | 1.4 | 1.4 |
| **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **2.0** | **1.8** | **2.0** | **2.6** | **2.8** |
| 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 2.0 | 1.8 | 2.0 | 2.6 | 2.8 |
| **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **12.0** | **13.9** | **13.2** | **12.4** | **12.0** |
| 47.5 | 36.3 | 37.8 | 46.8 | 36.5 | 5.7 | 5.0 | 5,0 | 5.8 | 4.5 |
| 24.2 | 34.4 | 27.6 | 21.0 | 32.4 | 3.3 | 4.8 | 3.6 | 2.6 | 4.1 |
| 28.3 | 29.3 | 34.5 | 32.2 | 31.1 | 3.0 | 4.1 | 4.5 | 4.0 | 3.0 |
| **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **0.2** | **0.6** | **1.0** | **1.0** | **1.2** |
| | | | | | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

உயர்ந்தது. இக்கூட்டுத்தாபனங்களிலுள்ள வேலையாட்களின் எண்ணிக்கை 1971 இல் 29,895 ஆக இருந்து, 1972இல் 35,981ஆகக் கணிசமான அளவு அதிகரிப்பினைக் காட்டியது.

இப்பகுதியில், கைத்தொழில் உற்பத்தி பற்றிய மூன்று முக்கிய அட்டவணைகளும், இரண்டு துணை அட்டவணைகளும் தரப்பட்டுள்ளன. 11 (ஆ) 1 என்ற முதலாவது அட்டவணை, 1969–72 ஆம் ஆண்டு வரைக்கான உற்பத்தி, வேலை வாய்ப்புப் பற்றிய பரந்த புள்ளிவிவரத் தொகுப்பினைக் காட்டுகின்றது. 11 (ஆ) 2, என்ற அட்டவணையானது, 1968–72 ஆம் ஆண்டுவரைக்குமான உற்பத்தித் தரவினைக் கைத்தொழில், முக்கிய உற்பத்திகள் என்ற இரண்டு அடிப்படையிற் பாகுப்டுத்திக் காட்டுகின்றது. அதே நேரத்தில் 11(ஆ) 3 அட்டவணையானது, 1971ஆம் ஆண்டிலும் 1972ஆம் ஆண்டிலும் பதிலளித்த கைத்தொழிற் கூறுகள் பற்றிய உற்பத்தித்தரவினைத் தருகின்றது.

மொத்த உற்பத்திப் பெறுமதியில் 32.7 சதவீதமானவற்றிற்கு, உணவு, குடிபானங்கள், தேயிலைத் தயாரிப்பில் ஈடுபட்ட கைத்தொழிற் கூறுகள் காரணமாக இருந்ததுடன் பெரியளவான கைத்தொழிற் பிரிவையும் உள்ளடக்கியிருந்தது. மேலும் 1972ஆம் ஆண்டிலிருந்த கைத்தொழில்கள் தம் வெளியீட்டில் ரூ. 557 இலட்சம் அதிகரிப்பினைக் காட்டின. உணவு, குடிபானங்கள், புகையிலை கொண்ட கைத்தொழிற் பிரிவிலுள்ள உணவு தயாரித்தல், புகையிலை போன்ற உப பிரிவுகள் அவற்றின் விவசாயக் கைத்தொழில் தன்மை காரணமாகப் பெருமளவுக்கு இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களிலே தங்கியிருக்கவில்லை. இவ்வுட்பிரிவுக்குள் உள்ள கைத்தொழில் அலகுகளாவன பாற்பொருட்கள், உப்பு, தாவர எண்ணெய், தேங்காய்த் துருவல், புகையிலை என்பனவாகும்.

அட்டவணை 11 (ஆ) 1இற் காணப்படுகின்றவாறு, மற்றைய எல்லாப் பெரிய பிரிவுகளும் உற்பத்திப் பெறுமதியில் அதிகரிப்பினைக் காட்டின. உலோகம் இல்லாத தாதுப் பொருட்கள் கொண்ட கைத்தொழிற் பிரிவே (பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர) இவற்றிற்கு விதிவிலக்காகப் பெறுமதியில் ரூ. 35இலட்சம் வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது. துணிவகைகள், ஆடையணிகள், தோல் உற்பத்தி, வெட்டிய உலோகப் பொருட்கள் தயாரிக்கின்ற கைத்தொழில்களின் இயந்திர வகை, போக்குவரத்துச் சாதனங்கள் என்பவற்றின் உற்பத்தி, முறையே ரூ 883 இலட்சத்தாலும், ரூ. 313 இலட்சத்தாலும் அதிகரித்தது. மொத்தக் கைத்தொழில் உற்பத்திப் பெறுமதியில் இவற்றின் பங்கு, முறையே 16.1 சதவீதமாகவும் 12.5 சதவீதமாகவும் இருந்தது.

அட்டவணை 11 (ஆ) 2, முக்கிய கைத்தொழிற் பிரிவுகளுக்குள் உள்ள கைத்தொழில் உப பிரிவுகளின் சாதனை பற்றிய தரவுகளைத் தருகின்றது. இவ்வாண்டுக்

காலப்பகுதியில், விரிவடைந்த அல்லது குறைவுற்ற முக்கிய கைத்தொழிற் பிரிவுகள் பற்றிப் பகுப்பாய்வு செய்வதற்கு இத்தரவுகள் குறிப்பாகப் பொருத்தமானவையாகும். உற்பத்திப் பெறுமதியில் உணவு, குடிபானங்கள், புகையிலை என்பவற்றை உள்ளடக்கிய கைத்தொழிற் பிரிவானது கணிசமானளவு அதிகரிப்பினைக் காட்டியது. இரண்டு உபபிரிவுகளான உணவு தயாரித்தல், புகையிலை என்பனவற்றின் உற்பத்தி முறையே விரிவடைந்து 22.7 சதவீத 39.1 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. உணவுத் தயாரிப்பிலான பெறுமதி அதிகரித்ததற்கு, அநேகமாக, இத்துறையிலுள்ள அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் வெளியீட்டுப் பெறுமதியின் அதிகரிப்பே காரணமாகும்.

துணி வகைகள், ஆடை யணிகள், தோற் கைத்தொழில்களைப் பொறுத்தவரையில், உற்பத்திப் பெறுமதியில் பெருமளவு அதிகரிப்புப் பதிவுசெய்யப்பட்டது. இப்பிரிவின் உட்பிரிவுகளான துணிவகைகளை நெய்தல், நூல் நூற்றல், துணி வகைகளுக்குச் சீராக்கம் செய்தல் என்பனவற்றின் வெளியீடு ரூ. 1,815 இலட்சம் அல்லது 48.2 சதவீதத்தால் கணிசமானளவு அதிகரித்தது. இப்பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு இதுவே முக்கிய காரணமாகும் தேசிய புடவைக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடு அதிகரித்தமையே இவ்வதிகரிப்புக்குப் பெருமளவு காரணமாகும் வெட்டப்பட்ட உலோகப் பொருட்கள், இயந்திர வகையும் போக்குவரத்துச் சாதனங்களும் என்ற கைத்தொழிற் பிரிவிற் பதிவுசெய்யப்பட்ட உற்பத்திப் பெருக்கத்திற்கு உப பிரிவான இயந்திரவகையும் (மின்சாரம் தவிர) போக்குவரத்துச் சாதனங்களுமே சிறப்புக் காரணங்களாயின. இது வெளியீட்டினை ரூ. 573இலட்சத்திலிருந்து ரூ. 989 இலட்சமாக அதிகரித்தது. இது 72.6 சதவீத அதிகரிப்பாகும். 1971ஆம் ஆண்டு அளவையிற் சேர்க்கப்படாத ஒரு சில முக்கிய கைத்தொழிற் கூறுகளின் முயற்சியின் தரவுகளைப் பெற்றமையே உற்பத்திப் பெறுமதி அதிகரிப்பதற்குக் காரணமாக இருந்தது. ஏனைய கைத்தொழிற் பிரிவுகளில் இரசாயனப் பொருட்கள், பெற்றோலியம், நிலக்கரி, றப்பர், பிளாத்திக்குப் பொருட்கள் கொண்டுள்ள கைத்தொழிற் பிரிவின், உட்பிரிவான பெற்றோலியம், நிலக்கரிப் பொருட்கள் மாத்திரமே உற்பத்திப் பெறுமதியிற் குறிப்பான அதிகரிப்பினை எடுத்துக்காட்டின. இவ்வுட்பிரிவினுற் பதிவுசெய்யப்பட்ட அதிகரிப்பானது ரூ. 610 இலட்சம் அல்லது 30.7சதவீதமாக இருந்தது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினுல் தயாரிக்கப்பட்ட பெற்றோலியம், பெற்றோலியப் பொருட்களின் பெறுமதி அதிகரித்ததே இதற்குக் காரணமாகும்.

உலோகமல்லாத தாதுப்பொருட்கள் கொண்ட கைத்தொழிற் பிரிவானது (பெற்றோலியம், தாதுப்பொருள் தவிர) உற்பத்தியில் ஒரு சிறிய வீழ்ச்சியினையே காட்டியபோதிலும், இப்பிரிவின் உப பிரிவுகளுக்கான வெளியீட்டுப் பெறுமதியிற் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படவில்லை. சீமெந்து, சீமெந்

துப் பொருட்கள், கல்நார் (அஸ்பெஸ்ரஸ்) பொருட்கள் தவிர தனிப்பட்ட உப பிரிவுகளில் வெளியீட்டுப் பெறுமதியிற் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படவில்லை. இது ரூ 63 இலட்சமான சிறிய வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது. கல்நார்ப்பொருட்களின் வெளியீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சியே இதற்கு முக்கிய காரணமாகும். இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்கள் போதாதிருந் தமையினாலும் இது ஏற்பட்டிருக்கலாம்.

துணை அட்டவணை 11 (ஆ) 2 (1) ஆனது, உற்பத்திப் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்புகளுக்கேற்ப, கைத்தொழில் உப பிரிவுகளின் பாகு பாட்டைத் தருகின்றது. பெற்றோலியம், நிலக்கரிப் பொருட்கள், நூல் நூற் றல், நெய்தல் என்பன பெறுமதியிற் கூடிய அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. இவை ஒவ்வொன்றினதும் உப பிரிவுகளும் உற்பத்திப் பெறுமதியினை ரூ. 500 இலட்சத்தால் அல்லது அதற்குக் கூடுதலாக அதிகரித்தன. இப்பிரிவுகள் துரிதமாக வளர்ந்து செல்வதாகத் தெரிகின்றன. கடந்தாண்டிலுங்கூட இவற் றின் உற்பத்திப் பெறுமதி கணிசமானளவால் அதிகரித்தது. இந்த உப பிரி வுகளான புகையிலை, இயந்திரங்கள் (மின்சாரம் தவிர) என்பன பெறுமதியில் ரூ. 200 இலட்சத்திலிருந்து ரூ. 500 இலட்சம்வரையிலான அதிகரிப்பினைக் காட்டின. ரூ. 50 இலட்சத்திலிருந்து ரூ. 200 இலட்சமாகப் பெறுமதியில் அதிகரித்துக் காணப்பட்ட கடதாசிப் பொருட்கள், இரும்பும் உருக்கும் என்பன, 1972இலும் கூட அவ்வாறு தொடர்ந்து அதிகரித்துச் சென்றன பின்னைய பிரிவினுள் இடம்பெறுகின்ற ஏனைய கைத்தொழிற் பிரிவுகளான பியர், ஸ்ரவுட், சாராயம், காலணி, மற்றும் தோற்பொருட்கள், மின்சார இயந்திர வகை, உற்பத்திப்பொருட்கள் போன்ற உப பிரிவுகள் இடம் பெற்றன.

### அட்டவணை II (ஆ) 2 (1)

### கைத்தொழில் உபபிரிவுகளின் அடிப்படையில் உற்பத்திப் பெறுமதியிலான அதிகரிப்பு

| ரூ. 0—50 இலட்சம் | ரூ. 50 — 200 இலட்சம் | ரூ. 200 — 500 இலட்சம் | ரூ. 500 இலட்சத் துக்கு மேல் |
|---|---|---|---|
| ஒட்டுப்பலகை | பியர், ஸ்ரவுட், சாராயம் | புகையிலை | உணவுத் தயாரிப்புக்கள் |
| கைத்தொழில் இரசாயனப்பொருள் | காலணிகளும் தோற்பொருட்களும் | | பெற்றோலியமும், நிலக்கரிஉற்பத்தி களும் |
| மட்பாண்டங்கள் | கடதாசிப் பொருட்கள் | இயந்திரவகை மின்சாரம் தவிர | நூல் நூற்றலும் நெய்தலும் |
| செங்கற்களும் ஓடுகளும் | இரும்பும் உருக்கும் மின்சார இயந்திர வகை | | |
| | தயாரிப்புப் பொருட்கள் வே. கூ. ப. | | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

துணை அட்டவணையான 11 (ஆ) 2 (2) ஆனது, 9 பெரிய கைத்தொழிற் பிரிவுகளிற் காணப்படுகின்ற, அநேகமான கைத்தொழில் முயற்சிகள் பற்றிய மாற்றத்தினைக் காட்டுகின்றது. அத்துடன், 1971—72ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலும் உள்ள உற்பத்திப் பெறுமதி பற்றிய தொடர்பான மாற்றத்தினையும காட்டுகின்றது. அட்டவணையிலிருந்து பொதுவில் கைத்தொழிற் பிரிவுகளின் பதிலளிக்கும் கூறுகளைப் பொறுத்தவரையில் வீழ்ச்சியே காணப்படுவது தெரியவருகின்றபோதிலும், இரண்டு கைத்தொழிற் பிரிவுகளில் உற்பத்தியின் மொத்தப் பெறுமதி அதிகரித்துள்ளது. எவ்வாறுயினும், மொத்த உற்பத்திப் பெறுமதி அதிகரித்துள்ளது. உலோகமல்லாத தாதுப் பொருட்கள் தொடர்பான ஒரு கைத்தொழிற் பிரிவு மாத்திரமே (பெற்றோலியம், நிலக்கரி தவிர) பதிலளித்த கூறுகளின் எண்ணிக்கை கூடியிருந்தபோதிலும் வெளியீட்டுப் பெறுமதியில் வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது. உணவு, குடிபானங்கள், புகையிலை கொண்ட கைத்தொழிற் பிரிவுதான், பதிலளித்த கூறுகளில் எண்ணிக்கையினால் மிகக் கூடுதலான வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. இத்துறையிற் பதிலளித்த நிறுவனங்களின் எண்ணிக்கை 223 ஆல் வீழ்ச்சியடைந்தது. இலங்கைப் புகையிலைக் கைத்தொழில்கள்[1] கூட்டுத்தாபனத்தினுற் சமர்ப்பிக்கப்பட்ட எல்லாப் பீடி உற்பத்தி செய்யும் கூறுகளையும் உள்ளடக்கிய, திரட்டப்பட்ட ஒரு புள்ளிவிவர அறிக்கையானது இவ்வீழ்ச்சியினை எடுத்துக்காட்டுகின்றது. இக்கைத்தொழிற் பிரிவிற் பதிவுசெய்யப்பட்ட அதிகரிப்பு ரூ. 557 இலட்சமாகும். துணிவகைகள், ஆடை அணிகள்,தோற்பொருட்கள் போன்றவற்றைக்கொண்ட கைத்தொழிற் பிரிவானது,பதிலளித்தற்கூறுகளிற் சிறியளவால் அதிகரித்தபோதிலும்தொழிற்உற்பத்திப்பெறுமதியிற் குறிப்பிடத்தக்கஅதிகரிப்பினைக்காட்டியது. உப பிரிவான நூல் நூற்றல், நெய்தல், சீராக்கஞ் செய்யப்பட்ட துணிகள் ஆகிய உப பிரிவுகளே இவ்வதிகரிப்புக்கு முக்கிய காரணமாகும். உற்பத்திப் பெறுமதியினை இவை 16.1 சதவீதத்தால் அதிகரிக்கச் செய்தன. 1972ஆம் ஆண்டில் இவ்வுட்பிரிவில் அறிவிக்கும் கூறுகளின் எண்ணிக்கையில் அதிகரிப்புக் காணப்பட்டது.எனினும்இவ்வதிகரிப்புஉடுப்புகளும்,ஏனையஆடை வகைககளும்(காலணிகள் தவிர) என்பவற்றில் பதிலளித்த கூறுகளின் எண்ணிக்கையிலேற்பட்ட வீழ்ச்சியினுல், எதிரீடுசெய்யப்பட்டது. வெட்டப்பட்ட உலோகப்பொருட்கள், இயந்திரவகை,போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியவற்றைத் தயாரிக்கின்ற பிரிவுதான் உற்பத்திப் பெறுமதியிற் குறிப்பிடத்தக்க பங்கினை வகித்தது. 1972ஆம்ஆண்டில் பதிலளித்த கூறுகளின் எண்ணிக்கை 7ஆற் குறைவுற்றபோதிலும். உற்பத்திப் பெறுமதிரூ. 313 இலட்சத்தால் உயர்வடைந்தது. முன்புகுறிப்பிட்டவாறு, 1971 ஆம் ஆண்டிற் பதிலளிக்காத ஒரு சில பெரிய நிறுவனங்கள் உற்பத்தித் தரவுகளைச் சமர்ப்பித்தமையே இதற்குக் காரணமாகும்.

---

1. இலங்கைப் புகையிலைக் கைத்தொழில்கள் கூட்டுத்தாபனம் 1972ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இக்கூட்டுத்தாபனத்தின் முக்கிய தொழில்கள் பின்வருவனவாகும்.

   (1) பீடி சுற்றும் இலைகளின் இறக்குமதி, வழங்கல், விற்பனை என்பனவும்

   (2) பீடிகள் தயாரிப்பு, பொதியிடல், வழங்கல், விற்பனை, ஏற்றுமதியுமாகும்.

## அட்டவணை II (ஆ) 2 (2)

## தகவல் தந்த கூட்டுநிலையங்களின் எண்ணிக்கையும் அவற்றின் உற்பத்திப் பெறுமதியும்

| கைத்தொழிற்றெகுதி | தகவல்தரும்தொழில் நிலையங்களின் எண்ணிக்கை மாற்றம் | உற்பத்திப் பெறுமதியில் மாற்றம் ப.இ. ரூ. |
|---|---|---|
| 1. தயாரிக்கப்பட்ட உணவு, குடிபானம், புகையிலை ... | — 223 | + 55.7 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோற் கைத்தொழில்கள் ... | + 5 | + 88.3 |
| 3. தளபாடம் உட்பட மரம், மரப் பொருள் உற்பத்திகள் .. | — 4 | + 4.1 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் ... | — 7 | + 8.8 |
| 5. இரசாயன, பெற்றோலிய, கரி, றப்பர், பிளாத்திக்குப் பொருட்களின் உற்பத்தி .. | — 48 | + 33.8 |
| 6. பெற்றோலியம் கரி தவிர்ந்த, உலோகச் சார்பற்ற கனிப் பொருள் உற்பத்திகள் தயாரிப்பு .. | + 13 | — 3.5 |
| 7. அடிப்படை உலோகப் பொருட்கள் .. | — | + 8.9 |
| 8. உருவாக்கப்பட்ட உலோகப் பொருட்கள் எந்திர சாதன, போக்குவரத்துச் சாதன உற்பத்தி ... | — 7 | + 31.3 |
| 9. தயாரிக்கப்பட்ட பொருட்கள் வே. கூ. ப. .. | — | + 7.3 |
| மொத்தம் | — 271 | + 234.7 |

அட்டவணை II (ஆ) 3 ஆனது 1971 ஆம் ஆண்டிலும் 1972 ஆம் ஆண்டிலும் பதிலளித்த கைத்தொழில் முயற்சிகளைப் பொறுத்தவரையில், உற்பத்திப் பெறுமதிக்கான தரவுகளைக் கைத்தொழில் உற்பத்திப்பொருட்கள் என்ற பாகுபாட்டின் அடிப்படையில் தருகின்றது இவ்விரண்டு காலப் பகுதியிலும் பதிலளித்த முயற்சிகளின் மொத்த எண்ணிக்கையானது 959 ஆக இருந்தது. 1971 ஆம் ஆண்டிலும் 1972 ஆம் ஆண்டிலும் தரவுகள் சமர்ப்பித்தவர்களின் எண்ணிக்கை முறையே 50 சதவீதமாகவும், 59 சதவீதமாகவும் இருந்தது. முன்னைய இரண்டு அட்டவணைகளிலே தரப்பட்ட உற்பத்திப் பெறுமதிக்கான உண்மை நியதிஎண்களிலும் பார்க்க, இங்கு காட்டிய கைத்தொழில் உற்பத்திப் பெறுமதி பற்றிய மாற்றம் 1972 ஆம் ஆண்டுக் கைத்தொழிற் செயலாற்றம் பற்றிய சிறந்த ஒப்பீட்டிற்கு வழிகாட்டியாகும்.

1972ஆம் ஆண்டில் 959 பதிலளித்த கூறுகளின் மொத்த வெளியீட்டுப் பெறுமதியானது ரூ. 20,831 இலட்சமாக விளங்கியது. இது 9.7 சதவீத அதிகரிப்பினைக் காட்டுகின்றது. அட்டவணை II (ஆ) 3 இன்படி, 1972 ஆம் ஆண்டு மொத்தக் கைத்தொழிற் செயலாக்கம், வெளியீட்டுப் பெறுமதியில்

## அட்டவணை II (ஆ) 3

### தொடர்பான பதிலளிக்கும் கூறுகளுக்கான தொழிற்றுறை உற்பத்தியின் பெறுமானம். 1971—1972

| கைத்தொழிற் பிரிவுகள் | தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை | உற்பத்தி (ப.இ.ரூ.) 1971 | உற்பத்தி (ப.இ.ரூ.) 1972 | சதவீத மாற்றங்கள் |
|---|---|---|---|---|
| **1. உணவு, குடிபானம், புகையிலைத் தயாரிப்புக்கள் ...** | **177** | **595.1** | **618.2** | **+ 3.9** |
| (அ) உணவுத் தயாரிப்புக்கள் | 88 | 209.5 | 262.3 | + 25.2 |
| (ஆ) தாவர எண்ணெயும் கொழுப்பும் | 1 | 174.2 | 143.9 | — 17.4 |
| (இ) பழுதடையாமற் கலனிடப்பட்ட பழங்கள், மரக்கறிகள், இறைச்சி, மீன் ஏனைய கடல் உணவுகள் | 27 | 20.9 | 9.8 | — 53.1 |
| (ஈ) விசுக்கோத்து, கொக்கோ, சொக்கிளேற்று இனிப்பு வகைகள் | 39 | 49.4 | 49.7 | + 0.6 |
| (உ) குடிபானங்கள் | 13 | 25.2 | 20.8 | — 17.5 |
| (ஊ) மதுசாரங்கள் | — | — | — | — |
| (எ) புகையிலை | 9 | 115.9 | 131.7 | + 13.6 |
| **2. புடவை, ஆடை அணிகள், தோற் கைத்தொழில்கள்** | **308** | **287.9** | **335.7** | **+ 16.6** |
| (அ) தைக்கப்பட்ட துணிகள், ஏனைய பொருட்கள், ஆக்கப்பட்ட ஆடைகளும் ஏனைய அணிகளும் தோற்பொருட்கள் தவிர்ந்த | 180 | 58.1 | 57.6 | — 0.9 |
| (ஆ) நூற்றல், நெய்தல், முடிப்புத் துணிகள் | 89 | 185.0 | 226.5 | + 22.4 |
| (இ) காலணிகளும், தோற்பொருள் உற்பத்திகளும் | 39 | 44.8 | 51.6 | + 15.2 |
| **3. தளபாடங்கள் உட்பட பலகை மரப் பொருட்களின் தயாரிப்பு** | **11** | **23.3** | **30.7** | **+ 31.8** |
| (அ) மரப் பொருட்களின் தயாரிப்புக்கள் | 10 | 9.5 | 12.7 | + 33.7 |
| (ஆ) ஒட்டுப்பலகை | 1 | 13.8 | 18.0 | + 30.4 |
| **4. தாளும் தாள் தயாரிப்புக்களும்** | **41** | **51.1** | **68.3** | **+ 33.7** |
| **5. இரசாயனப் பொருட்கள், பெற்றோலியம், நிலக்கரி, றப்பர், பிளாத்திக் பொருட்களின் தயாரிப்பு...** | **142** | **439 1** | **537 0** | **+ 22.3** |
| (அ) கைத்தொழில் இரசாயனப் பொருட்கள் | 1 | 3.3 | 5.2 | + 57.6 |
| (ஆ) பல்வகை இரசாயன உற்பத்திகள் | 93 | 158.9 | 189.8 | + 19.4 |
| (இ) பெற்றோலிய நிலக்கரி உற்பத்திகள் | 2 | 198 5 | 259.5 | + 30.7 |
| (ஈ) றப்பர் உற்பத்திகள் | 31 | 60.7 | 64.7 | + 6.5 |
| (உ) பிளாத்திக்கு உற்பத்திகள் | 15 | 17.7 | 17.8 | + 0.6 |
| **6. பெற்றோலிய, நிலக்கரி தவிர்ந்த உலோகப் பொருட்களல்லாத கனிப்பொருட்களின் தயாரிப்பு** | **42** | **175.2** | **166.9** | **— 4.7** |
| (அ) மட்பாண்டப் பொருட்கள் | 1 | 8 5 | 12.9 | + 51.8 |
| (ஆ) கண்ணுடியும் கண்ணுடிப் பொருட்களும் | 14 | 13 9 | 10.8 | — 22.3 |
| (இ) சீமெந்து, சீமெந்து உற்பத்திகள், கல்நார்ப் பொருட்களும் | 12 | 116,5 | 109.7 | — 5.8 |
| (ஈ) இல்மனைட் பொருட்கள் | 1 | 4.7 | 3.7 | — 21.3 |
| (உ) ஓடுகளும் செங்கட்டிகளும் | 14 | 30.1 | 29.8 | — 1.0 |
| **7. அடிப்படை உலோகத் தயாரிப்புகள்** | **1** | **58.6** | **67.5** | **+ 15.2** |
| (அ) இரும்பையும் உருக்கையும் அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் | 1 | 58.6 | 67.5 | + 15.2 |
| **8. உருவாக்கப்பட்ட உலோகத் தயாரிப்புக்களும், எந்திரமும் போக்குவரத்துச் சாதனமும்** | **201** | **246.2** | **235.9** | **— 4.2** |
| (அ) உருவாக்கப்பட்ட உலோகத் தயாரிப்புக்கள், எந்திரமும் சாதனமும் தவிர்ந்த | 109 | 106.4 | 85.3 | — 19.8 |
| (ஆ) எந்திரங்களும் (மின்சார வகை தவிர்ந்த) போக்குவரத்தும் சாதனங்களும் | 55 | 56.1 | 61.0 | + 8.7 |
| (இ) மின்சார எந்திரங்கள், ஆய்கருவிகள், உப கருவிகள் வழங்கும் பொருட்கள் | 37 | 83.7 | 89.6 | + 7.0 |
| **9. தயாரிக்கப்பட்ட உற்பத்திகள்** வே. கூ. ப. | **36** | **22.2** | **22.9** | **+ 3.2** |
| மொத்தம் | **959** | **1898.7** | **2083.1** | **+ 9.7** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அதிகரிப்பு ஏற்பட்டபோதிலும், ஓரளவுக்கு நிறைவானதொன்றாக அமைய வில்லை. 7 கைத்தொழிற் பிரிவுகள் உற்பத்திப் பெறுமதியில் அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. ஆனால் 2 பிரிவுகள் மாத்திரமே அதாவது, இரசாயனப்பொருட் கள், பெற்றோலியம், நிலக்கரி, றப்பர், பிளாத்திக்குப் பொருட்கள் ஆகிய பிரிவும் புடவைகள், ஆடை அணிவகைகள், தோற் கைத்தொழில்கள் என்ற பிரிவும் முறையே ரூ. 979 இலட்சமும், ரூ. 478 இலட்சமும் கொண்ட கணிசமான அதி கரிப்பினைக் காட்டின முன்னையதைப் பொறுத்தவரையில், பெற்றோலியம், நிலக் கரிப் பொருட்கள் மற்றும் நானாவிதமான இரசாயனப் பொருட்கள், என்ற இரு உப பிரிவுகளும் காரணமாக இருக்க பின்னையவற்றிற்கு உப பிரிவான துணிவகைகள் தொடர்பான, நூல் நூற்றல், நெய்தல், சீராக்கஞ்செய்தல் ஆகியன காரணமாக இருந்தன. மற்றைய 7 கைத்தொழிற்பிரிவுகளும் சிறிய அதி கரிப்புக்களைப் பதிவுசெய்ய, 2 கைத்தொழிற் பிரிவுகள் வெளியீட்டுப் பெறு மதியில் வீழ்ச்சியினைப் பதிவுசெய்தன. மேலும், 1972 ஆம் ஆண்டில் 8 கைத் தொழில் உப பிரிவுகள் வெளியீட்டுப் பெறுமதியில் வீழ்ச்சியினைக் காட்டின. அவைகளாவன:—

1. தகரத்திலடைக்கப்பட்ட பழங்கள், மரக்கறி வகைகள், இறைச்சி, மீனும் மற்றைய கடலுணவுப் பொருட்களும்.
2. விசுக்கோத்துகள், கொக்கோ, சொக்கலேற்று, சீனி இனிப்புப் பண் டங்கள்.
3. குடிபானங்கள்.
4. பின்னப்பட்ட புடவைகள்
5. கண்ணாடியும் கண்ணாடிப் பொருட்களும்.
6. செங்கல்லும் ஓடுகளும்.
7. வெட்டிய உலோகங்கள்.
8. இல்மனைற் தயாரிப்பு.

இக்கைத்தொழில்களின் வெளியீட்டுப் பெறுமதியின் வீழ்ச்சியானது, கணிச மான ஒன்றாகக் காணப்படாதபோதிலும், 1972 ஆம் ஆண்டிற் காணப்பட்ட மற்றைய தொழில்களிற் பதிவுசெய்யப்பட்ட சிறிதளவு அதிகரிப்புக்களுடனும் விலை அதிகரிப்புக்களுடனும் பொதுவாக நோக்குமிடத்து, கைத்தொழிலின் முழுமையான செயலாக்கத்தன்மை திருப்திதருவதாக அமையவில்லை.

## (IV) கைத்தொழில் அமைப்பு

இலங்கைக் கைத்தொழில் அமைப்பானது, பெருமளவுக்கு, வெளிநாட் டுச் செலாவணிக் கிடைப்பனவுகளாலும் உள்நாட்டுச் சந்தையின் தன்மை அளவினாலும் பாதிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் உற்பத்திக் கைத்தொழிலா னது, இறக்குமதி பற்றிய கட்டுப்பாடுகள் கொண்டுவந்த ஆரம்பகாலத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டியது. இக்கட்டுப்பாடுகள் 60 ஆம் ஆண்டுகளிற் கொண்டுவரப்பட்டுப் பின்னர் தீவிரமாகக் கடைப்பிடிக்கப்பட் டன. 10 ஆண்டுகால இறுதிப் பகுதியில் நுகர்வோர் பொருட்கள் தொடர் பான கைத்தொழில்கள், ஆதிக்கம் செலுத்துகின்ற கைத்தொழிற் பிரிவாக இருந்தன. மொத்த உற்பத்திப் பெறுமதியில் இவற்றின் பங்கு சிறிதளவு தளம்பலுக்குள்ளானபோதும் வீழ்ச்சியடையவில்லை. இப்பிரிவானது, 1971ஆம் ஆண்டில் 49.9 சதவீதமாக இருந்து 1972 ஆம் ஆண்டில் 51.8 சதவீதமாக அதிகரித்தது.

## அட்டவணை II (ஆ) 4

## தொழிற்றுறை உற்பத்திப் பெறுமானம் 1968 – 72

### பிரதான பொருளாதாரப் பகுப்புக்களின்படி

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | சதவீதம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1968 | 1969 | 1970 | 1971 | 1972 | 1968 | 1969 | 1970 | 1971 | 1972 |
| **அ. நுகர்வுப் பொருட்கள் ...** | **695.3** | **835.4** | **917.0** | **1,101.2** | **1,265.0** | **49.7** | **51.3** | **47.2** | **49.9** | **51.8** |
| I. உணவு, குடிபானம், புகையிலை.. | 238.4 | 287.5 | 346.7 | 428.4 | 520.9 | 17.0 | 17.7 | 17.8 | 19.4 | 21.3 |
| அ. உணவுத்தயாரிப்புகள் (1) ... | 40.8 | 45.8 | 82.9 | 139.0 | 189.0 | 2.9 | 2.8 | 4.3 | 6.3 | 7.7 |
| ஆ. பழுதடையாமற் கலனிடப்பட்ட பழங்கள், மரக்கறிகள், இறைச்சி, மீன், ஏனைய கடல் உணவுகள் (2) ... | 8.4 | 8.6 | 11.8 | 23.2 | 11.5 | 0.6 | 0.5 | 0.6 | 1.1 | 0.4 |
| இ. விசுக்கோத்து, இனிப்பு வகைகள் ... | 44.3 | 49.9 | 50.5 | 53.1 | 50.2 | 3.2 | 3.1 | 2.5 | 2.4 | 2.1 |
| ஈ, வாயுபானங்கள் ... | 17.3 | 17.8 | 26.6 | 26.1 | 21.1 | 1.2 | 1.1 | 1.4 | 1.2 | 0.9 |
| உ, சாராயம், பியர், ஸ்ரவுட் ஆகியன ... | 17.1 | 59.5 | 68.3 | 62.1 | 75.4 | 1.2 | 3.7 | 3.5 | 2.8 | 3.1 |
| ஊ. புகையிலை ... | 110.5 | 105.9 | 106.6 | 124.9 | 173.7 | 7.9 | 6.5 | 5.5 | 5.6 | 7.1 |
| II. உடைகள் (3) ... | 55.7 | 56.0 | 64.3 | 70.8 | 66.7 | 4.0 | 3.4 | 3.3 | 3.2 | 2.7 |
| III காலணி, தோற்பொருள் உற்பத்தி ... | 32.4 | 38.9 | 45.1 | 46.0 | 56.6 | 2.3 | 2.4 | 2.3 | 2.1 | 2.3 |
| IV பல்வகை இரசாயனப் பொருட்கள் (4) ... | 118.9 | 155.6 | 155.9 | 230.3 | 213.5 | 8.5 | 9.6 | 8.0 | 10.4 | 8.7 |
| V தாளும் தாள் பொருட்களும் (5) ... | 19.4 | 13.4 | 13.1 | 18.0 | 40.4 | 1.4 | 0.8 | 0.7 | 0.8 | 1.7 |
| VI வெட்டப்பட்ட உலோகத்தயாரிப்பு எந்திரம், சாதனம் தவிர்த்து (6) | 9.1 | 13.1 | 3.4 | 3.6 | 5.0 | 0.7 | 0.8 | 0.2 | 0.2 | 0.2 |
| VII பிளாத்திக்கு உற்பத்திகள் ... | 32.5 | 28.2 | 32.8 | 37.7 | 17.9 | 2.3 | 1.7 | 1.7 | 1.7 | 0.7 |
| VIII கண்ணடியும் கண்ணடிப் பொருட்களும் .. | 4.8 | 7.7 | 8.1 | 13.9 | 11.9 | 0.3 | 0.5 | 0.4 | 0.6 | 0.5 |
| IX மட்பாண்டப் பொருட்கள் ... | 8.5 | 8.7 | 8.0 | 8.5 | 12.9 | 0.6 | 0.5 | 0.4 | 0.4 | 0.5 |
| X றப்பர்ப் பொருட்கள் ... | 41.2 | 52.8 | 56.4 | 60.2 | 67.7 | 2.9 | 3.2 | 2.9 | 2.7 | 2.8 |
| XI நூற்றல், நெய்தல், முடிவுத் துணிகள் ... | 123.7 | 154.8 | 154.2 | 147.9 | 208.4 | 8.9 | 9.5 | 8.0 | 6.7 | 8.5 |
| XII மரத்திலுலாய தயாரிப்புகள் ... | 8.0 | 9.2 | 10.4 | 12.8 | 12.7 | 0.6 | 0.6 | 0.5 | 0.6 | 0.5 |
| XIII தயாரிக்கப்பட்ட பொருட்கள் (மு. கூ. ப ) (7) ... | 2.7 | 9.5 | 18.6 | 23.1 | 30.4 | 0.2 | 0.6 | 1.0 | 1.1 | 1.3 |
| **ஆ. நடுத்தரப் பொருட்கள்** | **552.8** | **580.8** | **800.3** | **842.8** | **866.6** | **39.5** | **35.7** | **41.1** | **38.2** | **35.5** |
| I உணவுத் தயாரிப்புக்கள் (8) ... | 371.2 | 354.2 | 337.8 | 314.6 | 277.8 | 26.5 | 21.8 | 17.4 | 14.3 | 11.4 |
| II எந்திரம், போக்குவரத்துச் சாதனம் தவிர்த்த வெட்டப்பட்ட உலோகப் பொருட்கள் (9) ... | 70.4 | 68.9 | 93.5 | 124.4 | 106.1 | 5.0 | 4.2 | 4.8 | 5.6 | 4.3 |
| III தாளும் தாள் பொருட்களும் (10) | 35.2 | 48.9 | 51.9 | 52.3 | 38.7 | 2.5 | 3.0 | 2.7 | 2.4 | 1.6 |
| IV துணிநெய்தல் ... | 12.5 | 17.4 | 19.1 | 41.5 | 62.8 | 0.9 | 1.1 | 0.9 | 1.9 | 2.6 |
| V ஒட்டுப் பலகை ... | 8.9 | 8.8 | 10.8 | 13.8 | 18.0 | 0.6 | 0.5 | 0.6 | 0.6 | 0.7 |
| VI இல்மனைற் பொருட்கள் ... | 2.2 | 3.1 | 4.7 | 4.7 | 3.7 | 0.2 | 0.2 | 0.2 | 0.3 | 0.2 |
| VII கைத்தொழில் இரசாயனப் பொருட்கள் (11) .. | 2.3 | 2.2 | 3.1 | 3.3 | 5.2 | 0.2 | 0.1 | 0.2 | 0.1 | 0.2 |
| VIII மின்சார எந்திரம், ஆய்கருவி உபகருவி வழங்கல் ஆகியவை ... | 41.8 | 66.3 | 88.4 | 88.2 | 94.8 | 3.0 | 4.1 | 4.5 | 4.0 | 3.9 |
| IX பெற்ரோலியம், நிலக்கரித் தயாரிப்புகள் ... | 8.3 | 11.0 | 191.0 | 198.5 | 259.5 | 0.6 | 0.7 | 9.8 | 9.0 | 10.6 |
| **இ. முதலீட்டுப் பொருட்கள் ...** | **150.5** | **210.2** | **227.7** | **263.7** | **310.8** | **10.8** | **13.0** | **11.7** | **11.9** | **12.7** |
| I சீமெந்தும் சீமெந்துப் பொருட்களும் கல்நார்ப் பொருட்களும் ... | 70.0 | 89.0 | 104.8 | 116.7 | 110.4 | 5.0 | 5.5 | 5.4 | 5.3 | 4.5 |
| II எந்திரங்கள் (மின்சாரமும் போக்குவரத்துச் சாதனமும் தவிர்ந்த) ... | 45.9 | 77.9 | 70.8 | 57.3 | 98.9 | 3.3 | 4.8 | 3.6 | 2.6 | 4.0 |
| III செங்கட்டிகளும் ஓடுகளும் ... | 7.3 | 14.8 | 13.2 | 31.1 | 34.0 | 0.5 | 0.9 | 0.7 | 1.4 | 1.4 |
| IV இரும்பு உருக்கு (அ. தொ,(12) | 27.3 | 28.8 | 38.9 | 58.6 | 67.5 | 2.0 | 1.8 | 2.0 | 2.6 | 2.8 |
| **மொத்தம் ...** | **1398.6** | **1626.7** | **1945.0** | **2,207.7** | **2.442.4** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1. பாற்பண்ணைத் தயாரிப்புகள்; ஐஸ்கிறீம், உப்பு முதலியன.

2. பழப் பாணிகள், பழச்சாற்றுப் பசைகள், சுவைக் கூட்டுகள், பழத்தின் பானம் என்பன.

3. சேட்டுகள், பெனியன்கள் போன்றவை.

4. மருந்துப் பொருட்கள், அழகு சாதனங்கள், சவர்க்காரங்கள் தூய்மையாக்கும் பொருட்கள், தீப் பெட்டி, பற்பசை முதலியன.

5. எழுத்து வேலைக்கான தாள், பயிற்சிக் கொப்பி முதலியன.

6. அலுமினியப் பொருட்கள்.

7. துடைப்பங்கள், அச்சுவடிவங்கள், விளையாட்டுப் பொருட்கள், சங்கீத உபகரணங்கள் போன்றவை.

8. கால்நடை உணவு, கோழித் தீன், தாவர நெய் தேங்காய்த் துருவல் போன்றவை.

9. கலன்கள், முட்கம்பி ஆணிகள், துத்தநாகம் பூசிய பொருட்கள்.

10. அச்சு வேலைக்கான தாள், பெட்டிகள் ஏனைய அடைக்கும் பெட்டிகள், சுற்றுறைத் தாள் முதலியன.

11. எரிசோடாவும் குளோறினும்.

12. உருட்டப்பட்ட தொகுதியும் கம்பித் தயாரிப்புகளும்.

கைத்தொழிற் பொருட்களின் பற்றுக் குறைவினுல் உருவாக்கப்பட்ட உள் நாட்டுச் சந்தையின் தன்மை, நுகர்ச்சிப் பொருட்களை உற்பத்தி செய்வோருக்குச் சிறந்த ஊக்கம் அளிப்பதொன்றாக விளங்கியது. இவ்வுற்பத்தியாளர்களுடைய முயற்சியினுல் ஏற்பட்ட உற்பத்திப் பெறுமதியின் அதிகரிப்பிலிருந்து, எவ்வளவு தூரம் உற்பத்தியாளர் இத்துறைக்குச் செவிசாய்த்தனர் என்பதை அளவிடத்தக்கதாய் இருக்கும். அட்டவணை 11(ஆ) 4 ஆனது, 1968 — 1972 ஆம் ஆண்டுவரைக்கான, கைத்தொழில் உற்பத்தித் தரவினை முக்கிய பொருளாதாரப் பிரிவுகளாகப் பாகுபாடு செய்து தருகின்றது. 1968இல் நுகர்வுப் பொருட்களின் மொத்தப் பெறுமதி ரூ. 6,953 இலட்சமாக இருந்து 1972 இல் ரூ. 12,650 இலட்சமாகியது நுகர்வுப் பொருட்கள் பிரிவில், உணவு, குடிபானங்கள், புகையிலை என்பனதான் மிகவும் துரிதமாக வளர்ந்து வரும் கைத்தொழில்களாகக் காணப்பட்டன. 1968-1972 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இதனுடைய உற்பத்திப் பெறுமதி இரண்டு மடங்கிற்கும் மேலாகியது. நுகர்வோர் பகுதியில் உள்ள மற்றைய துரிதமாக அதிகரிக்கும் பிரிவாக நானுவித இரசாயனப் பொருட்கள் விளங்குகின்றன. இதே காலப்பகுதியில் இதனுடைய உற்பத்திப் பெறுமதியானது கிட்டத்தட்ட இருமடங்காகியது.

மொத்த உற்பத்திப் பெறுமதியில் நடுத்தரப் பொருட்களின் பங்கானது, 1971இல் 38.2 சதவீதமாக இருந்து 1972 இல் 35.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இக்கைத்தொழிற் பிரிவின் முயற்சியினுள் இலங்கைப் பெற்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் தோற்றம் இத்துறைக்குக் கணிசமானளவு வலுவினைக் கொடுத்தது. பெற்ரோலியத்தினதும், நிலக்கரிப் பொருட்களினதும் உற்பத்திப் பெறுமதி 1968 ஆம் ஆண்டில் ரூ. 83 இலட்சமாக இருந்து, 1972ஆம்ஆண்டில் ரூ. 2,595 இலட்சமாக கூரியளவு உயர்வுற்றது.

1968 - 1972 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் முதலீட்டுப் பொருட்களை உற்பத்தி செய்கின்ற கைத்தொழில்களின் உற்பத்திப் பெறுமதி, கைத்தொழில் உற்பத்தியின் மொத்தப் பெறுமதியில் இதனுடைய தொடர்பான பங்கானது, அநேகமாக நிலையானதொன்றாகக் காணப்பட்டபோதிலும் வெளியீடு இரண்டு மடங்கிற்கு மேலானது. தயாரிப்புத் தொழிற்றுறைக்குள், நடுத்தர, முதலீட்டுப் பொருட்களின் உற்பத்திக்குப் பெருமளவு அரசாங்க நிறுவனங்கள் புகுந்து கொண்டமை, இலங்கையின் கைத்தொழில் அமைப்பில் சமநிலையை அளிப்பதற்குக் காரணமாகியது.

அட்டவணை 11 (ஆ) 5 இல், வெளியீட்டுப் பெறுமதியில் நிறுவப்பட்ட கைத்தொழில் முயற்சிகளினது அளவு, பரம்பல் தொடர்பான தரவு கொடுக்கப்பட்டுள்ளது. கைத்தொழில் உற்பத்தியானது, எல்லாத்துறைகளிலும் ஒரு

சில முயற்சிகளிற்றான் மிகக்கூடியளவால் செறிந்திருப்பதை இவ்வட்டவணை எடுத்துக்காட்டுகின்றது. அடிப்படை உலோகப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், பெற்றோலியம், நிலக்கரி, றப்பர், பிளாத்திக்குப் பொருளுற்பத்தி உலோகமல்லாத தாதுப்பொருட்கள் (பெற்றோலியம், நிலக்கரி தவிர) ஆகியனவற்றில் இச்செறிவானது குறிப்பிடத் தக்கதாய் உளது. கைத்தொழிற் பிரிவில் உணவு, குடிபானங்கள், புகையிலை மற்றும் ஏனைய உற்பத்திப் பொருட்களும் ஆகக்குறைந்த செறிவினை எடுத்துக்காட்டுகின்றன.

**அட்டவணை II (ஆ) 5**

**தயாரிப்பு நிலையங்களின் அளவு அமைப்புக்கள் — 1972**

**வெளியீட்டுப் பெறுமதியின் அடிப்படையில்**

| கைத்தொழிற்றொகுதி | | வெளியீட்டுப் பெறுமானம் | | | |
|---|---|---|---|---|---|
| | | ரூ. 2½ இலட்சமும் அதற்குக் கீழும் | ரூ. 2½ – 20 இலட்சம் | ரூ. 20 இலட்சமும் அதற்கு மேலும் | மொத்தம் |
| 1. உணவு, குடிபானம், புகையிலை ஆகியவற்றின் தயாரிப்புகள் | தொழில் நிலைய எண்ணிக்கை | 235 | 43 | 26 | 304 |
| | உற்பத்தியின் % | 30.6 | 3.8 | 65.6 | 100.0 |
| 2. புடவைகள், ஆடை அணிகள் தோற் கைத்தொழில்கள் | தொழில் நிலைய எண்ணிக்கை | 521 | 82 | 36 | 639 |
| | உற்பத்தியின் % | 6.9 | 13.1 | 80.0 | 100.0 |
| 3. தளபாடங்கள் உட்பட மர உற்பத்திகளும், மரத் தயாரிப்புகளும் | தொழில் நிலைய எண்ணிக்கை | 5 | 4 | 2 | 11 |
| | உற்பத்தியின் % | 2.2 | 13.7 | 84.1 | 100.0 |
| 4. தாள், தாள் உற்பத்திகளும் தாள் பொருட்களும் | தொழில் நிலைய எண்ணிக்கை | 44 | 15 | 8 | 67 |
| | உற்பத்தியின் % | 3.9 | 14.8 | 81.3 | 100.0 |
| 5. இரசாயனப்பொருட்கள், பெற்றோலியம், நிலக்கரி, றப்பர், பிளாத்திக்கு ஆகியவற்றின் தயாரிப்புகள் | தொழில் நிலைய எண்ணிக்கை | 109 | 58 | 29 | 196 |
| | உற்பத்தியின் % | 1.4 | 6.8 | 91.8 | 100.0 |
| 6. பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்ந்த உலோகச் சார்பற்ற கனிப்பொருட்களின் தயாரிப்புகள் | தொழில் நிலைய எண்ணிக்கை | 36 | 19 | 9 | 64 |
| | உற்பத்தியின் % | 1.9 | 7.8 | 90.3 | 100.0 |
| 7. அடிப்படை உலோகப் பொருட்கள் | தொழில் நிலைய எண்ணிக்கை | — | — | 1 | 1 |
| | உற்பத்தியின் % | — | — | 100.0 | 100.0 |
| 8. வெட்டப்பட்ட உலோகப் பொருட்களும், எந்திரமும் சாதனமும் | தொழில் நிலைய எண்ணிக்கை | 132 | 104 | 44 | 280 |
| | உற்பத்தியின் % | 3.2 | 21.7 | 75.1 | 100.0 |
| 9. தயாரிக்கப்பட்ட உற்பத்திகள், வே. கூ. ப. | தொழில் நிலைய எண்ணிக்கை | 40 | 20 | 4 | 64 |
| | உற்பத்தியின் % | 10.0 | 42.2 | 47.8 | 100.0 |
| **மொத்தம்** | **தொழில் நிலைய எண்ணிக்கை** | **1122** | **345** | **159** | **1626** |
| | **உற்பத்தியின் %** | **12.3** | **9.4** | **78.3** | **100.0** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## (V) தொழில்நிலையும் கூலிகளும்

வேலைக்கமர்த்தப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 1971 ஆம் ஆண்டில் 1,10,141 ஆக இருந்து 1972 இல் 1,23,986 ஆக மெச்சத்தக்க அதிகரிப்பினை கொண்டிருந்தது. இது 12.6 சதவீத அதிகரிப்பினைக் காட்டுகின்றது. இவ்வதிகரிப்பானது, இரண்டு கைத்தொழிற் பிரிவுகளிற்றான் குறிப்பாக ஏற்பட்டது. அதாவது, துணிவகைகள், ஆடை அணிகள், தோற்பொருட்கள், அத்துடன் உற்பத்திக் கைத்தொழில்களான வெட்டிய உலோகப் பொருட்கள், இயந்திர வகையும் போக்குவரத்துச் சாதனங்களுமாகும். இவ்விரண்டு கைத்தொழில்களிலும் உள்ள வேலையாட்களின் எண்ணிக்கை முறையே 22,568 இலிருந்து 32,905 ஆகவும், 15,089 இலிருந்து 21,483 ஆகவும் உயர்வுற்றது. இவ்வதிகரிப்பு முறையே 45.8 சதவீதமாகவும், 42.3 சதவீதமாகவும் காணப்படுகின்றது. துணிவகைகள், ஆடை அணிகள் தோற் கைத்தொழில்கள் கொண்ட கைத்தொழிற் பிரிவுதான் கூடியளவுக்கு ஆட்களை வேலைக்கமர்த்தியது. இது எல்லாக் கைத்தொழில் ஊழியர்களில் 26.5 சதவீதத்திற்கு வகைகூறியது. கைத்தொழிற் பிரிவில் வேலைசெய்த மொத்த வேலைநாட்கள் 26,232 இலிருந்து 31,610 ஆக அதிகரித்தன. இது 20.5 சதவீத அதிகரிப்பாகும்.

1972ஆம் ஆண்டில் கைத்தொழிற்றுறையினூற் செலுத்தப்பட்ட மொத்தக் கூலியானது 31.4 சதவீதத்தால் கூரியளவால் அதிகரித்தது. துணி வகைகள், ஆடை அணிகள், தோற் பொருட்கள், உலோகமல்லாத தாதுப் பொருட்கள் (பெற்றோலியம், நிலக்கரி, தவிர,) என்பவற்றினதுகூலிச்செலவு முறையே 68.3 சதவீதத்தினூலும், 45.0 சதவீதத்தினூலும் அதிகரித்தது. மொத்தத்தில் ஒரு வேலை நாளுக்கான கூலி 1971 ஆம் ஆண்டில் ரூ. 10.67 ஆக இருந்து, 1972இல் ரூ. 11.63ஆக உயர்வடைந்தது. இராசாயனப் பொருட்கள், பெற்றோலியம், நிலக்கரி, பிளாத்திக்குப் பொருட்கள் கொண்ட கைத்தொழில் பிரிவிற்றான் ஒரு வேலை நாளுக்கான கூலி மிக உயர்வாகக் காணப்பட்டது. இதில் ஒரு வேலை நாளுக்கான சராசரிக் கூலியானது ரூ. 18.33 ஆக அமைந்தது. ஆகக் குறைந்த ஒரு வேலைநாளுக்கான கூலி ஏனைய உற்பத்திப் பொருட்களில் ரூ. 8.20 ஆக இருந்தது.

அட்டவணை 11 (ஆ) 6இல், கூலிச்செலவுகளின் அடிப்படையில், கைத்தொழில் முயற்சிகளினதும் அளவு, பரம்பல் தொடர்பான தரவுகள் தரப்பட்டுள்ளன. இவ்வட்டவணையானது பெரிய கைத்தொழிற் கூறுகளில் வேலைநிலை, கூலிகள் மிகச் செறிவாக அமைந்திருப்பதனைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. உலோகமல்லாத தாதுப் பொருட்கள் (பெற்றோலியம், நிலக்கரி தவிர) மற்றும் இரசாயனப் பொருட்கள், பெற்றோலியம், நிலக்கரி, றப்பர், பிளாத்திக்குப் பொருட்கள் கொண்ட கைத்தொழிற் பிரிவுகளில் இது மிகத் தெளிவாகக் காணப்படுகின்றது. கூடிய செறிவினை வெளிக்கட்டாத ஒரேயொரு கைத்தொழிற் பிரிவாக உணவு, குடிபானங்கள், புகையிலை விளங்குகின்றது.

## அட்டவணை II (ஆ) 6

## தயாரிப்பு நிறுவனங்களின் அளவு அமைப்புக்கள் — கூலிச் செலவு அடிப்படையில்

| கைத்தொழிற்றெகுதி | | ரூ. 15 ஆ. கீழானது | ரூ. 15ஆ. மேல் ரூ. 50 ஆ. கீழ் | ரூ. 50 ஆ. மேல் ரூ. 500ஆ. கீழ் | ரூ. 500 ஆ. உம் மேலும் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானம், புகையிலை ஆகிவவற்றின் தயாரிபபு ... | தொ. நிலைய எண்ணிக்கை | 191 | 56 | 36 | 18 | 301* |
| | கூலிச் செலவின் சதவீதம் | 14.2 | 1.9 | 6.7 | 77.2 | 100 |
| 2. புடவைகளும், ஆடை அணிகளும், தோற்கைத்தொழில்களும் ... | தொ. நிலைய எண்ணிக்கை | 422 | 115 | 85 | 17 | 639 |
| | கூலிச் செலவின் சதவீதம் | 3.2 | 4.2 | 14.2 | 78.4 | 100 |
| 3. தளபாடங்கள் உட்பட மர உற்பத்திகளும், மரத் தயாரிப்புகளும் ... | தொ. நிலைய எண்ணிக்கை | — | 6 | 3 | 2 | 11 |
| | கூலிச் செலவின் சதவீதம் | — | 1.2 | 5.1 | 93.7 | 100 |
| 4. தாள் உற்பத்திகளும், தாள் பொருட்களும் ... | தொ. நிலைய எண்ணிக்கை | 31 | 16 | 16 | 4 | 67 |
| | கூலிச் செலவின் சதவீதம் | 1.8 | 3.3 | 17.0 | 77.9 | 100 |
| 5. இரசாயனப் பொருட்கள், பெற்ரோலியம், நிலக்கரி, றபபர் பிளாத்திக்கு ஆகியவற்றின் தயாரிப்புக்கள் ... | தொ. நிலைய எண்ணிக்கை | 78 | 44 | 51 | 23 | 196 |
| | கூலிச் செலவின் சதவீதம் | 0.6 | 1.6 | 8.9 | 88.9 | 100 |
| 6. பெற்ரோலியமும் நிலக்கரியும் தவிர்ந்த உலோகச்சார்பற்ற கனிப் பொருட்களின் தயாரிப்புக்கள் | தொ. நிலைய எண்ணிக்கை | 17 | 14 | 23 | 10 | 64 |
| | கூலிச் செலவின் சதவீதம் | 0.3 | 1.1 | 8·0 | 90.6 | 100 |
| 7. அடிப்படை உலோகப் பொருட்கள் .. | தொ. நிலைய எண்ணிக்கை | — | — | — | 1 | 1 |
| | கூலிச் செலவின் சதவீதம் | — | — | — | 100 | 100 |
| 8. உருவாக்கப்பட்ட உலோகப் பொருட்கள் எந்திரமும், சாதனமும் .. | தொ. நிலைய எண்ணிக்கை | 67 | 74 | 111 | 28 | 280 |
| | கூலிச் செலவின் சதவீதம் | 0.9 | 4.1 | 32.8 | 62.2 | 100 |
| 9. தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் வே. கூ. ப. ... | தொ. நிலைய எண்ணிக்கை | 25 | 17 | 20 | 2 | 64 |
| | கூலிச் செலவின் சதவீதம் | 3.3 | 9.3 | 57.3 | 30.1 | 100 |
| **மொத்தம்** | தொ. நிலைய எண்ணிக்கை | **831** | **342** | **345** | **105** | **1623*** |
| | கூலிச் செலவின் சதவீதம் | + 4.2 | 2.6 | 13.8 | 79.4 | 100 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* பியர் ஸ்ரவுட் என்பவை சம்பந்தமான கூலிகள் இரு தொழில் நிலையங்கட்கு மட்டுமே கிடைக்கத்தக்கதாக இருக்கின்றது.

(VI) மூலப் பொருட்களின் பயன்பாடு

உற்பத்திப் பெறுமதியில் 50 சதவீதமானவை, மூலப் பொருட்களின் பெறுமதியினைக் கொண்டுள்ளதனை அட்டவணை 11 (ஆ) 7 எடுத்துக்காட்டுகின்றது. மூலப் பொருட்களின் மொத்தப் பெறுமதியில், இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்கள் 77 சதவீதமாக உள்ளன.

தொடர்புபடுத்திப் பார்க்குமிடத்து இரு கைத்தொழிற் பிரிவுகள் மாத்திரமே, இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களைக் குறைந்தளவு பயன்படுத்தியமையைக் காட்டின. அவையாவன, தளபாடங்கள் உட்பட மரமும் மரப் பொருட்களும், உலோகமற்ற தாதுப் பொருட்கள் (பெற்றோலியம், நிலக்கரி தவிர). மூலப் பொருட்களின் மொத்தப் பெறுமதியில், இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்கள் இக்கைத்தொழில்களில் 7.9 சதவீதயாகவும் 34.6 சதவீதமாகவும் இருந்தன, 4 கைத்தொழிற் பிரிவுகள், மூலப் பொருட்களின் பெறுமதியில் 80 சதவீதத்திற்கு மேலானவற்றை இறக்குமதி செய்தன; அவையாவன.

1. அடிப்படை உலோகப் பொருட்கள் (96.1 சதவீதம்)
2 இராசாயனப் பொருட்கள், பெற்றோலியம், நிலக்கரி, றப்பர், பிளாத்திக்குப் பொருட்கள் தயாரித்தல் (92 2 சதவீதம்)
3. ஏனைய உற்பத்திப் பொருட்கள் (82.1 சதவீதம்)
4. வெட்டிய உலோகப் பொருட்கள் இயந்திர வகை, போக்குவரத்துச் சாதனங்கள் உற்பத்தி செய்கின்ற கைத்தொழில்கள் (81.9 சதவீதம்)

உணவு, குடிபானங்கள், புகையிலை கொண்ட கைத்தொழிற் பிரிவானது இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களிலே தங்கியிருந்தமை – அவற்றின் உப பிரிவுகளுக்கு ஏற்பவும், பொருட்களுக்கு ஏற்பவும் வேறுபடுகின்றது. அதே நேரத்தில்தாவர எண்ணெய்,கொழுப்புக்கள், புகையிலை என்பவைஇறக்குமதிப் பொருட்களை அதிகளவாகக்கொண்டிருக்கவில்லை. மற்றைய இனிப்புப் பண்டவகைகள், விசுக்கோத்துக்கள் என்பவை இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளிற்றான் பெருமளவு தங்கியிருந்தன. அட்டவணை II (ஆ) 7 ஆனது, பெரிய கைத்தொழிற் பிரிவுகளினுல் ஈட்டிய வெளிநாட்டுச் செலாவணியைக் காட்டுகின்றது. வெளிநாட்டுச் செலாவணியைக் கூடியளவு பெறும் கைத்தொழில்களாக, இரசாயனப்பொருட்கள், பெற்றோலியம், நிலக்கரி, றப்பர், பிளாத்திக்குப் பொருட்கள் ஆகியன விளங்கின. இதனுடைய வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் ரூ. 713 இலட்சமாகும். இத்தொகையானது இதனுடைய மூலப் பொருட்களின் வெளிநாட்டுச் செலாவணிப் பெறுமதியில் 21.7 சதவீதமாக இருந்தது கணிசமானளவு வெளிநாட்டுச் செலாவணியை உணவு, குடிபானங்கள், புகையிலையும் உலோகமல்லாதாதுப் பொருட்களும் (பெற்றோலியம், நிலக்கரி தவிர) கொண்ட கைத்தொழிற்பிரிவுஈட்டியது. இவைகளுடைய ஏற்றுமதி வருவாய்கள் 169 இலட்சமாகவும் ரூ. 117 இலட்சமாகவும் உள்ளன.

(VII) சக்தியினதும், எரிபொருளினதும் பயன்பாடு

ஒவ்வொரு கைத்தொழிலின் அடிப்படையில் சக்தியினதும் எரிபொருளினதும் பயன்பாடு பற்றிய தரவுகளை அட்டவணை 11 (ஆ) 8 தருகின்றது

## அட்டவணை II (ஆ) 7

### உற்பத்தியும். மூலப்பொருட்களும், ஏற்றுமதிகளும் — 1972

| | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | உற்பத்தி ப. இ. ரூ. | மூலப்பொருட்கள் (ஆ. ரூபாய்களில்) ஆயிரம் ரூபாவில் மொத்தப் பெறுமதி | உள்நாட்டு பெறுமதி | வெளிநாட்டு பெறுமதி | வெளிநாட்டு சதவீதம் | ஏற்றுமதிகள் பெறுமதி | ஏற்றுமதிகள் 5 இன் சதவீதமாக7 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானம், புகையிலை ஆகியவற்றின் தயாரிப்புகள் | 148 | 427.4 | 233,611 | 69,033 | 164,578 | 70.4 | 16,892 | 10.3 |
| 2. புடவைகள், ஆடையணிகளும், தோற் கைத்தொழில்களும் | 543 | 302.7 | 136,992 | 42,671 | 94,231 | 68.8 | 7,722 | 5.6 |
| 3. தளபாடங்கள் உட்பட மரவுற்பத்திகளும் மரத் தயாரிப்புகளும் | 5 | 19.4 | 17,504 | 16,126 | 1,378 | 7.9 | 1,138 | 82.6 |
| 4. தாள் உற்பத்திகளும் தாள் பொருட்களும் | 58 | 73.3 | 44,229 | 11,957 | 32,272 | 73.0 | 128 | 0.4 |
| 5. இரசாயனப் பொருட்கள், பெற்றோலியம், நிலக்கரி, றப்பர், பிளாத்திக்குப் பொருட்கள் ஆகியவற்றின் தயாரிப்புகள் | 155 | 526.0 | 355,982 | 27,796 | 328,186 | 92.2 | 71,343 | 21.7 |
| 6. பெற்றோலியமும், நிலக்கரியும் தவிர்ந்த உலோகச் சார்பற்ற கனிப் பொருட்களின் தயாரிப்புகள் | 56 | 149.7 | 54,675 | 35,763 | 18,912 | 34.6 | 11,742 | 62.1 |
| 7. அடிப்படை உலோகப் பொருட்கள் | 1 | 67.5 | 49,028 | 1,890 | 47,138 | 96.1 | — | — |
| 8. உருவாக்கப்பட்ட உலோகப் பொருட்கள், எந்திரமும், சாதனமும் | 183 | 199.0 | 122,042 | 22,092 | 99,950 | 81.9 | 7,223 | 7.2 |
| 9. தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் வே. கூ. ப. | 39 | 12.2 | 6,233 | 111,3 | 5,120 | 82.1 | — | — |
| மொத்தம் | 1,188 | 1777.2 | 1620,226 | 228,531 | 791,765 | 77.6 | 116,188 | 14.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை II (ஆ) 8
## உற்பத்தி, சக்தியும் எரிபொருளும் — 1972

| | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை | உற்பத்தி (ரூ.ப.இ.) | பயன்படுத்தப்பட்ட எரிபொருள் (ஆயிரம் ரூ.) | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | மின்சாரம் | நிலக்கரியும் வாயுவும் | பெற்ரோலும் எண்ணெயும் | ஏனையவை | மொத்தம் |
| 1. உணவு, குடிபானம், புகையிலை ஆகியவற்றின் தயாரிப்புகள் ... | 77 | 128.7 | 1787 | 29 | 1218 | 408 | 3442 |
| 2. புடவைகளும், ஆடையணிகளும், தோற் கைத்தொழில்களும் ... | 306 | 251.7 | 4987 | 168 | 2068 | 144 | 7367 |
| 3. தளபாடங்கள் உட்பட மர உற்பத்திகளும், மரத் தயாரிப்புகளும் .. | 2 | 2.1 | 193 | 76 | 50 | 19 | 338 |
| 4. தாள், தாள் உற்பத்திகளும் ... | 47 | 36.8 | 135 | — | 24 | 6283 | 6442 |
| 5. இரசாயனப் பொருட்கள், பெற்ரோலியம், நிலக்கரி, றப்பர், பிளாத்திக்கு ஆகியவற்றின் தயாரிப்புகள் ... | 92 | 194.2 | 6807 | 1002 | 2184 | 473 | 10466 |
| 6. பெற்ரோலியமும் நிலக்கரியும் தவிர்ந்த உலோகச் சார்பற்ற கனிப்பொருட்களின் தயாரிப்புகள் ... | 45 | 128.6 | 5878 | 27 | 10768 | 648 | 17321 |
| 7. அடிப்படை உலோகப் பொருட்கள் ... | 1 | 67.5 | 1982 | — | 1091 | — | 3073 |
| 8. உருவாக்கப்பட்ட உலோகப் பொருட்களும், எந்திரமும் சாதனமும் ... | 166 | 196.9 | 1349 | 442 | 1056 | 323 | 3170 |
| 9. தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் வே. கூ. ப. .. | 26 | 10.5 | 158 | 4 | 48 | 1 | 211 |
| **மொத்தம்** | **762** | **1016.0** | **23276** | **1748** | **18507** | **8299** | **51830** |

தயாரிப்புக் கைத்தொழிலிற் பயன்படுத்தப்பட்ட சக்தியினதும், எரிபொருளினதும் மொத்தச் செலவானது, 1971ஆம் ஆண்டில் ரூ. 449 இலட்சமாகவும்1972ஆம் ஆண்டில் ரூ. 518 இலட்சமாகவும், இருந்து, ரூ. 69 இலட்ச அதிகரிப்பினைக் காட்டியது. 1972ஆம் ஆண்டில் உற்பத்திப் பெறுமதியில் சக்தி, எரிபொருளினது செலவானது 5 சதவீதமாக இருந்தது. 1971இல் அதே தொடர்பான பங்கு, மொத்த உற்பத்திப் பெறுமதியில் 3 சதவீதமாக இருந்தது. 1972இல் மின்சாரம், பெற்ரோல், எண்ணெய் ஆகியன சக்தியினை வழங்கிய முக்கிய மூலங்களாக விளங்கின. சக்தி, எரிபொருள் நுகர்வில் அவற்றின் பங்கு முறையே 44.9 சதவீதமாகவும், 35.7 சதவீதமாகவும் இருந்தது. ஒவ்வொரு கைத்தொழில் அடிப்படையில் சக்தி, எரிபொருளினது பயன்பாட்டினைப் பொறுத்தவரையில் 1971 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து, 1972ஆம் ஆண்டில் கணிசமானளவு மாற்றமொன்றும் ஏற்படவில்லை.

**மாகாண அடிப்படையிலான**

| கைத்தொழிற் பிரிவு | மேல் மாகாணம் | | | மத்திய மாகாணம் | | | தென் மாகாணம் | | | வட மாகாணம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிறுவனங்களின் எண்ணிக்கை | உற்பத்தி | | நிறுவனங்களின் எண்ணிக்கை | உற்பத்தி | | நிறுவனங்களின் எண்ணிக்கை | உற்பத்தி | | நிறுவனங்களின் எண்ணிக்கை | உற்பத்தி | |
| | | பெறுமதி ரூ. ஆயிரம் | % | | பெறுமதி ரூ. ஆயிரம் | % | | பெறுமதி ரூ. ஆயிரம் | % | | பெறுமதி ரூ. ஆயிரம் | % |
| 1. உணவு, குடிவகை, புகையிலை ஆகியவற்றின் தயாரிப்பு ... | 221 | 703,593 | 31 1 | 41 | 79.118 | 90.1 | 8 | 6,832 | 14.0 | 14 | 1,496 | 7.2 |
| 2. புடவைகள், ஆடை அணிகள், தோல் உற்பத்திகள் ... | 479 | 364,411 | 16.1 | 62 | 3,728 | 4.2 | 44 | 14,099 | 28.9 | 21 | 6,035 | 29.0 |
| 3. தளபாடம் உட்பட, மரம், மரப் பொருள் உற்பத்திகள் .. | 8 | 12,510 | 0.5 | — | — | — | 2 | 18,064 | 36.9 | — | — | — |
| 4. தாள், தாள் உற்பத்திப் பொருட்கள் | 60 | 78,294 | 3.4 | — | — | — | 4 | 393 | 0.8 | 3 | 465 | 2.2 |
| 5. இரசாயன, பெற்றோலிய, கரி, றப்பர், பிளாத்திக்குப் பொருட்களின் உற்பத்தி ... | 158 | 546,642 | 24.2 | 16 | 1,800 | 2.1 | 9 | 3,435 | 7.0 | 7 | 11,083 | 53.3 |
| 6. பெற்றோலியம், கரி தவிர்ந்த உலோகச் சார்பற்ற கனிப்பொருள் உற்பத்திகள் தயாரிப்பு ... | 47 | 164,164 | 7.3 | 4 | 637 | 0.7 | 3 | 359 | 0.7 | 4 | 915 | 4.5 |
| 7. அடிப்படை உலோகப் பொருட்கள்... | 1 | 67,520 | 3.0 | — | — | — | — | — | — | — | — | — |
| 8. உருவாக்கப்பட்ட உலோகப் பொருட்கள், எந்திர போக்கு வரத்துச் சாதன உற்பத்தி ... | 257 | 297,413 | 13.1 | 6 | 855 | 1.0 | 8 | 5,689 | 11.6 | 7 | 651 | 3.1 |
| 9. தயாரிக்கப்பட்ட பொருட்கள் வே. கூ. ப. .. | 53 | 28,591 | 1.3 | 7 | 1,624 | 1.9 | 2 | 50 | 0.1 | 2 | 149 | 0.7 |
| மொத்தம் .. | 1,284 | 2,263,138 | 92.7 | 136 | 87,762 | 3.6 | 80 | 48,921 | 2.0 | 58 | 20,794 | 0.8 |

## கைத்தொழில்களின் அமைவிடம் (1972)

| கீழ் மாகாணம் | | | வடமேல் மாகாணம் | | | ஊவா மாகாணம் | | | வடமத்திய மாகாணம் | | | சப்பிரகமுவா மாகாணம் | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிறுவனங்களின் எண்ணிக்கை | உற்பத்தி | | நிறுவனங்களின் எண்ணிக்கை | உற்பத்தி | | நிறுவனங்களின் எண்ணிக்கை | உற்பத்தி | | நிறுவனங்களின் எண்ணிக்கை | உற்பத்தி | | நிறுவனங்களின் எண்ணிக்கை | உற்பத்தி | | நிறுவனங்களின் எண்ணிக்கை | உற்பத்தி | |
| | பெறுமதி ரூ. ஆயிரம் | % | | பெறுமதி ரூ. ஆயிரம் | % | | பெறுமதி ரூ. ஆயிரம் | % | | பெறுமதி ரூ. ஆயிரம் | % | | பெறுமதி ரூ. ஆயிரம் | % | | பெறுமதி ரூ. ஆயிரம் | % |
| 5 | 5,885 | 46.0 | 11 | 1,110 | 16.8 | — | — | — | 2 | 594 | 90.0 | 2 | 57 | 70.4 | 304 | 798,685 | 32.7 |
| 8 | 584 | 4.6 | 16 | 4,599 | 68.5 | 7 | 928 | 59.8 | 1 | 45 | 6.8 | 1 | 24 | 29.6 | 639 | 394,453 | 16.2 |
| — | — | — | 1 | 110 | 1.6 | — | — | — | — | — | — | — | — | — | 11 | 30,684 | 1.2 |
| — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | 67 | 79,152 | 3.2 |
| — | — | — | 3 | 158 | 2.4 | 2 | 623 | 40.2 | 1 | 21 | 3.2 | — | — | — | 196 | 563,762 | 23.1 |
| 2 | 6,314 | 49.4 | 4 | 547 | 8.2 | — | — | — | — | — | — | — | — | — | 64 | 172,936 | 7.1 |
| — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | 1 | 67,520 | 2.8 |
| — | — | — | 2 | 186 | 2.8 | — | — | — | — | — | — | — | — | — | 280 | 304,794 | 12.5 |
| — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | 64 | 30,414 | 1.2 |
| 15 | 12,783 | 8.5 | 37 | 6,710 | 0.3 | 9 | 1,551 | 0.1 | 4 | 660 | 0.03 | 3 | 81 | 0.003 | 1,626 | 2,442,400 | 100.0 |